# 20 இலங்கைச் சைவசமய வளர்ச்சி

வரலாற்றுக் காலத்துக்கு முன்பே இலங்கையில் சைவசமயம் நிலவியது. அது காலத்திற்குக் காலம் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. அவ்வாறான வளர்ச்சி நிலைகளை அறிந்துகொள்ள இராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம் முதலான இதிகாச புராணங்களும், மகாவம்சம், சூளவம்சம், தீபவம்சம் மற்றும் யாழ்ப்பாண வைபவமாலை முதலான வரலாற்று நூல்களிற் காணப்படும் செய்திகளும் இபுன்பத்தூத்தா, மக்கன்சி முதலான தேச சஞ்சாரிகளது குறிப்புக்களும் மற்றும் வரலாற்று அறிஞர்களின் ஆய்வு முடிவுகளும், தொல்பொருட் சின்னங்களும், சிங்கள மொழியில் அமைந்த தூதுப் பிரபந்தங்களும் உதவுகின்றன.


இத்தகைய வரலாற்றுச் சான்றாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் சைவசமய வளர்ச்சி நிலையை மேல்வரும் வளர்ச்சிக் காலங்கள் ஊடாக அறிவோம்.

1. **புராதன இலங்கையிற் சைவம்**
2. **அநுராதபுரக் காலம்**
3. **பொலநறுவைக் காலம்**
4. **பொலநறுவை அரசிற்குப் பிற்பட்ட - போர்த்துக்கேயர் வருகைக்கு முற்பட்ட காலம்**
5. **ஐரோப்பியர் காலம்**
6. **இருபதாம் நூற்றாண்டும் தற்காலமும்**

## (1) புராதன இலங்கையிற் சைவம்

அநுராதபுர இராசதானியின் எழுச்சிக்கு முன்னரான காலப் பகுதி இலங்கை வரலாற்றில் புராதன காலமாகக் கூறப்படுகிறது. அக்காலத்தில் நிலவிய சைவசமயத்தின் நிலையை வரலாற்றுச் சான்றுகள் நிரூபித்துள்ளன.

இலங்கையின் ஆதிக்குடியினராகிய இயக்கரும் நாகரும் சிவ வழிபாட்டினைப் பின்பற்றினர். இயக்கர் பூத வழிபாட்டினையும், நாகர் நாக வழிபாட்டினையும் பேணினர். இத்தகைய நாக வழிபாட்டின் தொடர்ச்சியை திருக்கேதீச்சரம், நயினை நாகபூசணி அம்மன் கோயில் மற்றும் நாகதம்பிரான் ஆலயங்கள் வாயிலாக இனங்காணலாம்.


புராதன இலங்கையில்
காணப்பட்ட ஈச்சரங்கள்
நகுலேச்சரம்
திருக்கோணேச்சரம்
திருக்கேதீச்சரம்
முன்னேச்சரம்
சந்திரசேகரீச்சரம்

விஜயன் இலங்கைக்கு வரும்போது இலங்கையின் நான்கு திசைகளிலும் ஐந்து சிவாலயங்கள் காணப்பட்டதாகவும் அவ்வாலயங்களை புனருத்தாரணம் செய்து விஜயன் வழிபட்டதாகவும் 'யாழ்ப்பாண வைபவமாலை'' குறிப்பிடுகின்றது. கிழக்கில் திருக்கோனேச்சரமும் எனும் மேற்கில் திருக்கேதீச்சரம் மற்றும் முன்னேச்சரமும், வடக்கில் திருத்தம்பலேச்சரமும், (நகுலேச்சரம்) தெற்கில் சந்திரசேகரீச்சரமும் அமைந்திருந்தன என அந்நூல் குறிப்பிடுகிறது. இக்கூற்றுக்கு மேலும் வலுவூட்டுவதாக சேர் போல் பீரிஸ் எனும் சிங்கள வரலாற்றாசிரியரின் கருத்தும் அமைகிறது.

தேவநம்பியதீசனுக்கு முன்பு இலங்கையை ஆண்ட மன்னர்கள் சைவர்களாக விளங்கியதோடு அவர்கள் பிராமணர்களையும் ஆதரித்து வந்தமைக்கான சான்றுகளை மகாவம்சம், தீபவம்சம், மற்றும் பிராமிக் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது. மேலும் அநுராதபுர இராசதானியை அமைத்த பண்டுகாபயன் **'சிவிகசாலை', 'சொத்திசாலை'** எனும் நிலையங்களை அமைத்ததாக மகாவம்சம் கூறுகிறது. இங்கு குறிப்பிடப்படும் 'சிவிக சாலை' சிவலிங்கத்தைத் தாபித்து வழிபடும் கோட்டமாகவும், சொத்தி சாலை பிராமணர்கள் வேதம் ஓதுவதற்காக அமைக்கப்பட்ட சாலையாகவும் விளங்கின என்பர் அறிஞர். தேவநம்பியதீசனுக்கு முன்னர் இலங்கையை ஆண்ட மன்னர்களது பெயர்களில் **'சிவ'** எனும் பிற்சேர்க்கை அமைந்திருந்ததை அவதானிக்கலாம். கிரிகண்டசிவன், மகாசிவன், மூத்தசிவன் என்போர் அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாவர். அவர்கள் சிங்கள மன்னர்களாக இருந்த போதிலும் சைவர்களாக விளங்கியதோடு பிராமணர்களையும் ஆதரித்து வந்துள்ளனர். பிராமணர்கள் அரசர்களின் புரோகிதர்களாக விளங்கியதுடன் ஆலோசகர்களாகவும் செயற்பட்டனர்.

பிராமிக் கல்வெட்டுக்கள் வாயிலாகவும் இக்கால சைவம் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. "எவஎல்லுகொடகந்த" எனுமிடத்தில் கண்டெடுக்கப்பட்ட கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் பிராமிக் கல்வெட்டில் **''சிவம்'', ''சிவகூடம்''** முதலிய குறிப்புகள் காணப்படுகின்றன.

இருபத்தியிரண்டிற்கு மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களில் பிராமணர்கள் பற்றிய செய்தியும், அறுபதுக்கு மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுகளில் சிவ எனும் அடைமொழியும் காணப்படுகின்றன.

## 2. அநுராதபுரக்காலம்

பண்டுகாபயனுடைய ஆட்சிக்காலம் தொடக்கம் ஐந்தாம் மகிந்தனின் ஆட்சிக்காலம் வரையான காலப்பகுதி அநுராதபுரக்காலம் ஆகும்.

கி.மு. 145 - கி.மு 101 வரையான காலப்பகுதியில் எல்லாளன் எனும் தமிழ் மன்னன் அநுராதபுரத்தை ஆண்டான். இவனது காலத்தில் சைவமும் மனுநீதியும் மேலோங்கிக் காணப்பட்டன. அவனுக்குப் பின் ஆட்சியைக் கைப்பற்றிய துட்டகைமுனு கதிர்காமக் கந்தனிடத்தில் நேர்த்திக்கடன் செலுத்துவதற்காகச் சென்ற போது அவனுடன் 1500 பிராமணர்களும் 500 பிக்குகளும் கலந்து கொண்டதை மகாவம்சம், கந்தோபய ஆகிய நூல்களின் மூலம் அறிந்து கொள்ளலாம். இலங்கையை ஆண்ட முதலாம் கஜபாகு மன்னன் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் சேர நாட்டிலிருந்து பத்தினித் தெய்வ வழிபாட்டை இலங்கையில் அறிமுகம் செய்தான்.

இக்காலப்பகுதியில் பௌத்த மன்னர்கள் சைவர்களாக மதம் மாறி சைவப்பணிகள் பல புரிந்தனர். "**நிக்காய சங்கிரஹம்**" என்ற நூலின் மூலம் கி.பி 831 - 851 காலப்பகுதியில் ஆட்சி செய்த முதலாம் சேனன் எனும் மன்னன் சைவத்துறவி ஒருவரால் சைவனாக மாற்றப்பட்டதாக அறிய முடிகிறது. இதை திருவாதவூரடிகள் புராணத்தில் மாணிக்கவாசகர் பௌத்த மன்னனை வாதில் வென்று சைவனாக மதம் மாற்றிய சம்பவம் குறிக்கிறது.

கி.பி. 5ஆம் நூற்றாண்டளவில் இலங்கை வந்த குளக்கோட்டன் என்ற சோழ அரசன் திருக்கோணேச்சரம், முன்னேச்சரம் முதலான ஆலயங்களில் திருப்பணி செய்ததற்கான ஆதாரங்கள் பல காணப்படுகின்றன.

தென் இந்தியாவில் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஞானசம்பந்தர் திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம் ஆகிய ஆலயங்கள் மீதும், கி.பி 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கேதீச்சரம் மீதும் பதிகங்கள் பாடியுள்ளனர். இவ்வாறு தென் இந்தியாவிலிருந்து பதிகங்கள்பாடுமளவிற்கு அங்கும் இவ்வாலயங்களின் மகிமை உணரப்பட்டமையே காரணமெனலாம்.

அநுராதபுரக் காலத்தில் பல சைவ ஆலயங்கள் அமைக்கப்பட்டமை பற்றி எச்.சி.பி.பெல் (H.C.P.Bell) என்கின்ற தொல்பொருளாய்வாளரது கருத்துக்கள் மூலம் அறிய முடிகிறது. சென்ற இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் அநுராதபுரம் ஜேதவனராமய, விஜயராமய விகாரைகளுக்கு அண்மையிலிருந்து பல சைவத்திருவுருவங்கள் புதைபொருளாய்வின் மூலம் பெறப்பட்டுள்ளன. அவற்றுள் சிவலிங்கம், துர்க்கை, விஷ்ணு, சூரியன் ஆகிய சிற்பங்களும் சந்திரசேகரர், உமா சமேத நடேசர், பார்வதி, வீரபத்திரர்,

# அனுராதபுரக்கால சிற்பங்கள்



அனுராதபுர கண்டகசைத்தியத்தின் வாசற் கடவையிற்
காணப்படும் இலங்கையின் முதலாவது விநாயகர் சிற்பம்



சிவலிங்கம்



சூரியன்



துர்க்கை



விஷ்ணு



சந்திர சேகரர்



உமா சமேத நடேசர்



சிவன்



பார்வதி



யோகாதட்சிணா மூர்த்தி



வீரபத்திரர்



பூவளநாயகி



பத்தினி (கண்ணகி)



ஐயனார்



சிவபார்வதி



நாலந்த கெடிகே



தெய்வேந்திர முனை
விஷ்ணு ஆலயம்

பூவளநாயகி நாகதம்பிரான், உமாமகேஸ்வரர், யோகா தட்சிணாமூர்த்தி ஆகிய செப்பிலமைந்த வார்ப்பு விக்கிரகங்கள் சிறப்பானவை. இவற்றுள் அநுராதபுரம் கண்டக சைத்திய வாசற் கடவையில் காணப்படும் விநாயகர் சிற்பமே இலங்கையில் கிடைக்கப்பெற்ற விநாயகர் சிற்பங்களுள் காலத்தால் முந்தியதாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

பல்லவ மன்னர்களது காலப்பகுதியில் மாமல்லபுரத்தில் கட்டப்பட்டது போன்று இந்துக்கட்டடக் கலை மரபைத் தழுவி அநுராதபுரக் காலப் பகுதியில் பல கட்டடங்கள் அமைக்கப்பட்டதை அறிய முடிகின்றது. மாத்தளை மாவட்டத்திலுள்ள நாலந்த எனுமிடத்தில் அமைக்கப்பட்ட **“கொடிகே”** மற்றும் தெய்வேந்திர முனையில் அமைக்கப்பட்ட **விஷ்ணு ஆலயம்** என்பன இம்மரபு முறையின் எச்சங்களை வெளிப்படுத்துகின்றன. இசுறுமுனிய விகாரையில் காணப்படும் காதலர் சிற்பம், குதிரைவீரன் சிற்பம் என்பன சிவன், பார்வதி மற்றும் ஐயனார் வடிவங்களாக ஆய்வாளர்களால் இனங் காணப்பட்டுள்ளன. இக்காலப்பகுதியில் மதுரை இளவரசி மாருதப்புரவீகவல்லியினாலும் அவளின் கணவனான உக்கிரசிங்கனாலும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் கட்டப்பட்டது என்பது வரலாறு. அதன் மூலம் கி.பி. 8ஆம், 9ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையின் வட பகுதியிலும் சைவம் நன்னிலையை அடைந்திருந்தமையை அவதானிக்க முடிகிறது.

## 3. பொலநறுவைக் காலம்

இலங்கை வரலாற்றில் கி.பி 10ஆம் நூற்றாண்டு முதல் 13 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி பொலநறுவைக் காலமாகும். கி.பி. 1017இல் இலங்கை சோழ சாம்ராச்சியத்தின் ஒரு பகுதியாகியது. முதலாம் இராஜராஜனும் அவன் மகன் இராஜேந்திர சோழனும் இலங்கை முழுவதையும் தம் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். பொலநறுவை அவர்களின் ஆட்சிக்காலத்தில் “ஜனநாத மங்கலம்” என்றும் **“புலத்திய நகரம்”** என்றும் அழைக்கப்பட்டது.

பொலநறுவைக் காலப்பகுதியில் சைவம் முன்னரை விட உயர்ந்த நிலையில் காணப்பட்டது. பொலநறுவையில் மாத்திரம் 10 இற்கு மேற்பட்ட சிவாலயங்கள், 5 விஷ்ணு ஆலயங்கள், ஒரு காளி கோயில் என்பன கட்டப்பட்டிருந்ததை புதைபொருள் ஆய்வுகள் மூலம் அறிய முடிகிறது. இவற்றுள் இரண்டாம் சிவாலயம் இராஜராஜனின் மனைவி பெயரில் “வானவன்மாதேவி ஈச்சரம்” என அழைக்கப்பட்டதோடு சோழர்களது கலைப் பாணியை இன்றும் பிரதிபலிக்கும் கற்றளி ஆலயமாக விளங்குகிறது.

பொலநறுவைக்கு அடுத்ததாக அக் காலப்பகுதியில் அதிக ஆலயங்கள் கட்டப்பட்ட இடமாகப் “பதவியா” விளங்குகிறது. சோழர் காலத்தில் ஐந்து

## பொலநறுவை நகரில் அமைந்துள்ள ஆலயங்கள்
### (ஜனநாத மங்கலம்)





முதலாம் சிவாலயம்




இரண்டாம் சிவாலயம்
(வானவன் மாதேவிஈச்சரம்)




மூன்றாம் சிவாலயம்





நான்காம் சிவாலயம்




ஐந்தாம் சிவாலயம்




ஆறாம் சிவாலயம்




சிவலிங்கம்




விஷ்ணு ஆலயம்

சிவாலயங்கள் இங்கு கட்டப்பட்டன. இவற்றுள் முதலாம் இராஜராஜனுடைய காலத்தில் கட்டப்பட்ட கோயில்களுள் **"இரவிகுலமாணிக்க ஈஸ்வரம்"** சிறப்பானது. இவற்றின் அழிபாடுகளுக்கிடையே நந்தியின் உருவம் பொறித்த சமஸ்கிருத மொழியில் அமைந்த முத்திரையொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. அம்முத்திரையில் "இந்திரன் முதலான தேவர்கள் வழிபடும் பாதாரவிந்தங்களை உடைய மகேசனது சாசனம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் அவ்வாலயத்தின் அன்றைய நன்னிலையை அறிந்து கொள்ள முடிகிறது.



பதவியா
இரவிகுலமாணிக்கஈஸ்வரம்



பதவியா முத்திரை



பூநகரி மண்ணித்தலை சிவாலயம்

அநுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டொன்றின் மூலம் **"உத்தம சோழேஸ்வரம்"** எனும் ஆலயம் "கடவத்கோறளையில்" அமைந்திருந்தமை பற்றி அறிய முடிகிறது. இதே போல் குருணாகல் மாவட்டத்தின் புதுமுகத்தலாவை என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக் குறிப்பின் படி அங்கு **விக்கிரமசாலாமேக ஈஸ்வரம்** என்னும் ஆலயம் அமைந்து இருந்தமை பற்றி அறிய முடிகின்றது. மதிரிகிரியில் **"பண்டிதசோழேஸ்வரம்"** எனும் ஆலயம் சோழ மன்னர்களது படையினரால் அமைக்கப்பட்டது.

சோழர்களது காலத்தில் கந்தளாய் இராஜராஜ சதுர்வேதிமங்கலம் என அழைக்கப்பட்டதோடு இங்கு சிவாலயம் ஒன்றும் **முத்தங்கைக் கோயில்** எனும் துர்க்கையின் ஆலயமொன்றும் அமைக்கப்பட்டது. யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து கண்டெடுக்கப்பட்ட முதலாம் இராஜேந்திரன் காலத்து கல்வெட்டு மூலம் நல்லூரிலிருந்த ஆலயமொன்றிற்கு தானம் கொடுக்கப்பட்ட செய்திகளை அறிய முடிகிறது. மேலும் பூநகரியிலுள்ள மண்ணித்தலை எனுமிடத்திலுள்ள சிவாலயமும் சோழர் காலத்தைச் சேர்ததாக ஆய்வுகள் நிரூபிக்கின்றன.

சோழர்கள் இலங்கையில் புதிய ஆலயங்களை அமைத்ததோடு புராதன ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்தமை பற்றியும் அறிய முடிகிறது. மாதோட்டம், ஊர்காவற்றுறை போன்ற இடங்களிற் கிடைக்கப்பெற்ற கல்வெட்டுக்களின் மூலம் சோழர்கள் திருக்கேதீச்சரத்தில் பல திருப்பணிகள் செய்ததுடன் இங்கு **"இராஜராஜேச்சரம்" "திருவிராமேச்சரம்"** என்னுமிரு சிவாலயங்கள் கட்டியதாயும் மாதோட்டம் **"ராஜராஜபுரம்"** என அழைக்கப்பட்டதாகவும் அறிய முடிகிறது. அவ்வாறே திருக்கோணேச்சரம் சோழ மன்னர்களது காலத்தில் **மச்சேஸ்வரம்** என அழைக்கப்பட்டது.

# பொலநறுவைக்கால வார்ப்புப் படிவங்கள்


விநாயகர்


நடராசர்


சிவகாமி


சந்திர சேகரர்


நந்தி


பார்வதி



சோமஸ்கந்தர்


நடராஜர்


சிவகாமி


உமாமகேஸ்வரர்


சைவசமய குரவர்கள்


காரைக்கால் அம்மையார்

சோழ மன்னர்களைத் தொடர்ந்து பொலநறுவையை ஆட்சி செய்த சிங்கள மன்னர்களும் அக்கால சைவசமய வளர்ச்சிக்கு ஆதரவு நல்கியதைக் கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிகிறது. சோழர்களது ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்த முதலாம் விஜயபாகு மன்னன் கந்தளாயில் **"விஜயராஜேஸ்வரம்"** எனும் சிவாலயத்தை அமைத்ததாகவும் கந்தளாய் **"விஜயராஜ சதுர்வேதி மங்கலம்"** என அழைக்கப்பட்டதாகவும் அறிய முடிகிறது.



கந்தளாய் விஜயராஜேஸ்வரம்
நடராசர்நடரா

இதே போன்று நிசங்க மல்லனின் சாசனமொன்றின் மூலம் கந்தளாய் "சதுர்வேதி பிரம்மபுரம்" என அழைக்கப்பட்டதோடு அங்கு பார்வதி சத்திரம் என்ற தானசாலையை அமைத்தான் என்றும், அங்குள்ள தேவாலயமொன்றின் உற்சவ காலத்தில் இடம் பெற்ற நாட்டியக் காட்சியை நிசங்கமல்லன் பார்வையிட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

பொலநறுவைக் காலத்தின் இறுதிப் பகுதியில் ஆண்ட கலிங்க மாகனுடைய ஆட்சிக் காலத்தில் கிழக்கிலங்கையிற் பல ஆலயங்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டதாக அறிய முடிகிறது. அவற்றில் கொக்கட்டிச்சோலை, திருக்கோவில், திருப்பெருந்துறை, அமிர்தகழி முதலிய இடங்களில் அமையப் பெற்ற ஆலயங்கள் சிறப்பானவையாகும்.

**"வைஜயந்தி சூத்திரம்"** எனும் சிற்பநூல் இக்காலப்பகுதியில் எழுதப்பட்டது. சைவத் திருவுருவங்கள் முன்னொரு போதும் இல்லாதளவுக்கு பொலநறுவைக் காலத்தில் வார்க்கப்பட்டுள்ளன. பொலநறுவையிற் கிடைத்த வார்ப்புப் படிமங்களுள் சிவகாமி சமேத நடராசர், விநாயகர், பார்வதி, முருகன், வைரவர், சேமாஸ்கந்தர், சண்டேஸ்வரர் முதலானவை கலைநயம் மிக்கவை. அவற்றின் கலைநயம் பற்றி "கலாயோகி ஆனந்த குமாரசுவாமி" அவர்கள் விபரித்துள்ளார்.

இலங்கையின் சைவசமய வரலாற்றில் பொலநறுவைக் காலம் தனித்துவம் மிகு சைவப் பண்பாட்டு மரபுகளைக் கொண்ட காலமாக அமைந்திருந்தமையை அறிந்து கொள்ள முடிகிறது.

## மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக

1. இலங்கையின் ஆதிக்குடியினராகிய நாகரும் இயக்கரும் வழிபட்ட வழிபாடு யாது?
2. சிவ என்னும் சொல் அமையப்பெற்ற மன்னர்களின் பெயர்கள் இரண்டு தருக.
3. விஜயன் இலங்கைக்கு வரும்போது இலங்கையின் நான்கு திசைகளிலும் காணப்பட்ட சிவாலயங்கள் யாவை?
4. அநுராதபுரக் காலப்பகுதியில் இந்துக்கட்டடக் கலை மரபைப் பின்பற்றி அமைக்கப்பட்ட கட்டடங்கள் யாவை?
5. திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் ஆகிய ஆலயங்கள் சோழ மன்னர்களின் காலத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டன?

## செயற்பாடு

01. பொலநறுவைக் காலப்பகுதியில் அமையப்பெற்ற சிவாலயங்களைப் பட்டியற்படுத்தி வகுப்பறையிற் காட்சிப்படுத்துங்கள்.

02. அநுராதபுர, பொலநறுவைக் கால சைவ ஆலயங்கள், திருவுருவங்கள் ஆகியவற்றின் படங்களைச் சேகரித்து வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.

## பாடச்சுருக்கம்

1. இலங்கையின் சைவசமய வரலாற்றினை அறிய பல வரலாற்றுச் சான்றுகள் உதவுகின்றன.
2. புராதன இலங்கையை ஆட்சி செய்த மன்னர்கள் சைவர்களாக விளங்கியதோடு பல சமயப் பணிகளையும் ஆற்றினர்.
3. சோழமன்னர்கள், சிங்களமன்னர்கள், வணிகர்கள் என்பவர்களால் அநுராதபுரம் மற்றும் பொலநறுவைக் காலங்களில் சைவ ஆலயங்கள் பல பரிபாலிக்கப்பட்டன.

# 04. பொலநறுவை அரசிற்குப் பிற்பட்ட - போர்த்துக்கேயர் வருகைக்கு முற்பட்ட காலம் (கி.பி. 1250 - கி.பி. 1505)

கலிங்க மாகனின் ஆட்சியின் முடிவில் பல்வேறு காரணங்களால் பொலநறுவை இராசதானி வீழ்ச்சியுற்று மக்கள் தென்மேற்கு நோக்கி இடம் பெயரலாயினர். 13ஆம் நூற்றாண்டில் தம்பதெனிய இராச்சியமும் அதைத் தொடர்ந்து யாப்பகூவ, குருணாகல், கோட்டை முதலிய இராசதானிகளும் இலங்கையின் தென்பகுதியிற் தோற்றம் பெற்றன. மலையகத்தில் கம்பளையைத் தொடர்ந்து கண்டி இராச்சியம் தோற்றம் பெற்றது. வட பகுதியில் ஆரியச் சக்கரவர்த்திகள் யாழ்ப்பாண இராச்சியத்தை நெறிப்படுத்தினர். அக்காலப் பகுதியில் இலங்கையில் சைவசமயம் தமிழ், சிங்கள மன்னர்களால் முதன்மைப்படுத்தப்பட்டது.

## அ. தென்னிலங்கை இராசதானிகளில் சைவம்

தென்னிலங்கையிலுள்ள தெவிநுவரவில் (தெய்வேந்திரமுனை) அமைந்திருந்த நகர்சன் என்ற சிவாலயம் பற்றிய செய்திகளை ஏழாம் விஜயபாகுவின் கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது. இதுவே முன்னர் சந்திரசேகரீச்சரமாகக் கருதப்பட்டதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இவ்வாலயத்தை சேர்ந்ததாகக் கருதப்படும் சிவலிங்கம், நந்தி, விநாயகர் ஆகிய திருவுருவங்கள் நிலத்தில் புதையுண்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் திஸரசந்தேஸய நூல் மூலம் இங்கு அமைக்கப்பட்ட இரண்டு விநாயகர் ஆலயங்கள் பற்றியும் அதில் ஒன்று இராமச்சந்திரன் எனும் வணிகரால் நிர்மாணிக்கப்பட்டதாகவும் அறிய முடிகிறது.

அக்காலப்பகுதியில் தெவிநுவரவில் அமைக்கப்பட்ட ஆலயங்களுள் விஷ்ணு ஆலயம் முதன்மையானது. அவ்வாலயத்தின் சிறப்புக்களை இரண்டாம் பராக்கிரமபாகுவின் கல்வெட்டு, மற்றும் **இபுன்பத்தூத்தா, குவெறோஸ், (F.D. QUYROS 1930) மக்கன்சி** முதலான அறிஞர்களது குறிப்புகளும் சீன அரசன் யுங்-லோ என்பவனால் அவ்வாலயத்திற்கு வழங்கப்பட்ட தானங்கள் பற்றிய செய்திகளைத் தரும். சீனம், பாரசீகம், தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் மூலமும் அறிய முடிகிறது.

ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் கோட்டையில் நகருக்குப் புறத்தே அழகிய ஈஸ்வரன் ஆலயமொன்று இருந்ததாகவும் அங்கு தினமும் வாத்திய இசைகளுடன் தமிழில் பக்திப் பாசுரங்கள் பாடப்பட்டதாகவும் சலலிஹினி சந்தேஸய (பூவைவிடுதூது) மூலம் அறிய முடிகிறது. இக்கூற்றினை நிறுவுமுகமாக 1984ல் கொழும்பு மாவட்டத்தின் இரத்மலானையில் கோட்டை இராச்சியத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படும் சிவாலயம் ஒன்றின் கட்டட

# தெவிநுவர ஆலயங்கள்



சந்திரசேகரீச்சர ஆலய
சிவலிங்கம்



நந்தி





# சீதாவாக்கை வெரண்டி கோவிலின் சிதைவுகள்









# இரத்மலானை திருநந்தீச்சரம்









அழிபாடுகளும் அவற்றுள் ஆவுடையார் மற்றும் நந்தி என்பன வெளிப்படுத்தப்பட்டு இன்று திருநந்தீச்சரம் என்னும் பெயரில் வழிபடப்படுவதும் அவதானிக் கத்தக்கது.


முன்னேஸ்வரம்

கோட்டை இராச்சியத்தை ஆண்ட ஆறாம் பராக்கிரமபாகு, ஒன்பதாம் பராக்கிரமபாகு என்போரால் முன்னேச்சரம் பரிபாலிக்கப்பட்டதாக முன்னேச்சர ஆலயத்திற் காணப்படும் கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிகின்றது.

சீதாவாக்கையில் அமைக்கப்பட்ட வெரண்டி கோயில் (சிவாலயம்) மாயாதுன்னையின் காலத்தில் அமைக்கப்பட்டது. அது நாயக்கர்கால இந்து, திராவிட, கட்டடக்கலை மரபைப் பின்பற்றி பிரமாண்டமான தோற்றம் கொண்டதாக அமைக்கப்பட்டது. அதன் சிறப்புகளை ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் தோற்றம் பெற்ற சவுல் சந்தேசய (சேவல் விடுதூது) குறிப்பிடுகின்றது. இவ்வாலயத்தின் கலையழகினைக் கண்டு வியப்புற்ற போர்த்துக்கேய வரலாற்றாசிரியரான **தே கூற்றே** (DO couto) மேல் வருமாறு குறிப்பிடுகிறார்.

“இலங்கை முழுவதிலும் உள்ளவற்றில் மிகவும் சிறந்ததும் அளவிற் பெரியதுமான கோயில் இப்பகுதியில் அமைந்துள்ளது. பரமேஸ்வரன் என்று சொல்லப்படும் அவர்களின் கடவுளின் படிமத்தை வழிபடுவதற்கென்று அது உருவாக்கப்பட்டுள்ளது. அதன் கட்டட வேலைப்பாடுகள் விசித்திரமானவை. அதன் கட்டுமானப்பணிகள் 20 வருடங்களாக நடைபெற்றன. அதில் 20000 தொழிலாளர்கள் ஈடுபட்டனர்” என்றும் சொல்லப்படுகிறது. பேர்சிவல் என்ற ஆங்கிலேயரும் இவ்வாலயத்தின் சிறப்பினை விபரித்துள்ளார். போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட இவ்வாலயத்தின் அதிஷ்டானப்பகுதி மாத்திரமே இன்று எஞ்சியுள்ளது.


சிலாபம் மானவரி ஈஸ்வரன் கோயில்

திஸர சந்தேஸய (அன்னம் விடுதூது), சலலிஹினி சந்தேஸய (பூவை விடுதூது) ஆகிய நூல்கள் மூலம் கோட்டை நகரில் அமைந் திருந்த முருகன் கோவில் பற்றிய செய்திகளை அறியமுடிகிறது. இவ்வாலயத்திற்கு ஏழாம் விஜயபாகுவின் ஆட்சிக்காலத்தில் வாழ்ந்த அச்சுதராயன் என்பவன் வழங்கிய தானங்கள் பற்றிய விபரங்களைச் சாசனம் ஒன்று விபரிக்கிறது. கோகில சந்தேஸய (குயில் விடுதூது) நூல் மூலம் களுகங்கைக்கு அண்மையில் அமைந்த விநாயகர்

கோவில் பற்றிய செய்திகளை அறிய முடிகிறது. அத்தோடு பரவி சந்தேஸய (புறா விடுதூது) மூலம் இரண்டாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் பெந்தோட்டை நகரில் அமையப் பெற்ற காளி கோயில் பற்றிய செய்திகளை இனம்காண முடிகிறது.

மேலும் களுத்துறையில் கிடைத்த கல்வெட்டொன்று களுத்துறை நகரில் அமையப்பெற்ற காளி கோயிலுக்கு வழங்கப்பட்ட தானங்கள் பற்றிய செய்திகளை விபரிக்கிறது. அத்துடன் சவுல் சந்தேஸய பிரபந்தம் மூலம் சீதாவாக்கை வெரெண்டி கோயிலுக்கு அண்மையிலிருந்த உமையம்மையின் கோயில் பற்றிய விபரங்களை அறிய முடிகிறது.

மேலும் கேகாலை மாவட்டத்தில் அமையப் பெற்ற மொட்டைப் பொலியார் கோயில், நீர்கொழும்பில் அமையப் பெற்ற நஞ்சுடான் கோயில் மற்றும் காமாட்சியம்மன் கோயில், சிலாபம் மானவரி ஈஸ்வரன் கோயில், கற்பிட்டி நாச்சியம்மன் கோயில், நிக்கவரட்டிய, குண்டசாலை, குருணாகல் முதலிய இடங்களில் அமையப் பெற்ற கண்ணகி அம்மன் ஆலயங்கள் எல்லாம் இக்காலப் பகுதியில் பொலிவுடன் விளங்கிய ஆலயங்களாக இனங்காணப்பட்டுள்ளன.

## ஆ. யாழ்ப்பாண இராச்சியத்தில் சைவம்

12ஆம் நூற்றாண்டில் பாண்டிய மன்னர்களின் சேனாதிபதியாகவிருந்த ஆரியச்சக்கரவர்த்திகள் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்தனர். கி.பி. 12ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 15ஆம் நூற்றாண்டு வரை இவர்களது ஆட்சி இடம்பெற்றது. இக்காலப்பகுதியில் சிங்கைநகர் (பூநகரி), நல்லூர் என்பன தலைநகரங்களாக விளங்கின. சைவசமயம் அரச சமயமாக பேணப்பட்டதோடு அது வடக்கிலும் கிழக்கிலும் மிக உன்னத நிலையை அடைந்திருந்தது.

யாழ்ப்பாண இராசதானியின் நல்லூர்த் தலைநகரில் நல்லூர் கந்தசுவாமிஆலயம் பிரதானமானது. இதை மையமாகக் கொண்டு வெயிலுகந்தவிநாயகர் ஆலயம், கைலாசநாதர் ஆலயம், சட்டநாதர் ஆலயம், வீரமாகாளியம்மன் ஆலயம், சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயம் என்பன அமைக்கப்பட்டன. இரகுவம்சத்தினை தமிழில் மொழிபெயர்த்த அரசகேசரியினால் நீர்வேலியில் அரசகேசரிப் பிள்ளையார் ஆலயமும், கருணாகரத் தொண்டமானால் உரும்பிராயில் கருணாகரப் பிள்ளையார் ஆலயமும், பரராஜசேகரனால் இணுவில் பராராஜசேகரப் பிள்ளையார் ஆலயமும், செகராசசேகரனால் செகராஜசேகரப் பிள்ளையார் ஆலயமும் அமைக்கப்பட்டன.

15ஆம் நூற்றாண்டில் ஆறாம் பராக்கிரமபாகுவின் வளர்ப்பு மகனாகிய சப்புமல்குமாரன் (ஆறாம் புவனேகபாகு / செண்பகப்பெருமாள்) என்பவனால் யாழ்ப்பாண இராச்சியம் கைப்பற்றப்பட்ட போது நல்லூரில் விளங்கிய நல்லூர்

# யாழ்ப்பாண இராச்சிய கால ஆலயங்கள்



வெயிலுகந்த விநாயகர் ஆலயம்



சட்ட நாதர் ஆலயம்



நல்லூர் கந்தசுவாமி ஆலயம்



கைலாச நாதர் ஆலயம்



வீரமா காளியம்மன் ஆலயம்



உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயம்



இணுவில் பரராஜசேகர பிள்ளையார் ஆலயம்



சாவகச்சேரி வாரீவனேஸ்வரம்



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்



நீர்வேலி அரச கேசரிப் பிள்ளையார் ஆலயம்.

## யாழ்ப்பாண இராச்சியக் கால சிற்பங்கள்



விநாயகர்



சுப்ரமணியர்

கந்தசுவாமி ஆலயம் அழிக்கப்பட்ட பின்னர் இவனாலேயே அமைக்கப்பட்டதாக யாழ்ப்பாண சரித்திரம் எனும் நூலின் மூலம் அறிய முடிகிறது. மேலும் நயினாதீவு நாகபூஷணியம்மன் ஆலயம், சாவகச்சேரி வாரீவனேச்சரம், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், மாதகல் சம்பேச்சரம், அங்கணாமைக்கடவை கண்ணகை யம்மன் ஆலயம், பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம் என்பன யாழ்ப்பாண இராச்சியக் காலத்தில் பொலிவுடன் விளங்கிய ஆலயங்களாகும்.

இக்காலப்பகுதியில் ஆலயங்கள் மட்டுமன்றி சைவப் பிரபந்தங்கள் பலவும் எழுச்சி பெற்றன. அவை சைவசமய வளர்ச்சிக்கு பெரிதும் உதவின. திருமலை பண்டிதராசர் தட்சணகைலாச புராணத்தையும், கவிராசர் கோணேசர் கல்வெட்டு என வழங்கும் கோணேசர் புராணத்தையும், முத்துராசர் கைலாய மாலையையும் இயற்றினர். பொதுமக்கள் இலக்கியமாகிய பள்ளு இலக்கியம் புதியதொரு பாடுபொருளைக் கொண்டு அமைந்தது.

## இ. வன்னி சிற்றரசர் காலத்தில் சைவம்

பனங்காமத்தினைத் தலைநகராகக் கொண்டு அமைந்த வன்னி இராசதானியில் சைவம் நன்னிலை பெற்றது. குதிரைமலை, செட்டிகுளம், கருநாவல்பற்று, தென்னமரவாடி, கொக்கிளாய், கரிக்கட்டுமூலை முதலான வன்னி பிரதானிகளின் பகுதிகளில் பல சைவ ஆலயங்கள் எழுச்சி பெற்றன.

ஒட்டுசுட்டான் தான்தோன்றியீஸ்வரர் ஆலயம், குமாரபுரம் சித்திரவேலாயுதர் ஆலயம் என்பன வன்னி மன்னர்களின் நல்வாதரவைப் பெற்றன. அத்துடன் மன்னார் குதிரைமலை அஸ்வகிரி சிவாலயம், செட்டிகுளம் சந்திரசேகரீச்சரம், உருத்திரபுரம் உருத்திரீச்சரம், வவுனிக்குளம் சிவாலயம், பனங்காமம் மற்றும் கற்சிலைமடுச் சிவாலயங்கள், ஓமந்தைப் பிள்ளையார் ஆலயம், முறிகண்டிப் பிள்ளையார் ஆலயம், புதுக்குடியிருப்பு குறவில் கோயில், முல்லைத்தீவு மன்னாக்கண்டல் சப்த மாதர் ஆலயம், வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம், செட்டிகுளம் மகிஷாசுர மர்த்தினி அம்மன் ஆலயம், ஆண்டான் குளம் மற்றும் சடவங்குளத்தில் அமையப்பெற்ற ஐயனார் ஆலயங்கள் என்பனவெல்லாம் இக்காலத்தில் சீருடன் விளங்கிய ஆலயங்களாகும்.

## ஈ. கிழக்கிலங்கை சிற்றரசர்கள் ஆட்சியில் சைவம்

கிழக்கிலங்கையில் குறிப்பாக மட்டக்களப்பில் சிற்றரசர்களும் பெருநிழக்கிழாரும் ஆட்சி புரிந்துள்ளனர். கொக்கட்டிச்சோலை தான்தோன்றியீஸ்வரர், கோயில் போரதீவு சித்திரவேலாயுதர், திருக்கோவில் சித்திர வேலாயுதர், மகோன், ஆடகசௌந்தரி முதலானோர்களால் பரிபாலிக்கப்பட்டன. அவர்களது ஆட்சிக் காலப் பகுதியில் எழுந்த ஆலயங்கள் தேசத்துக் கோயில்கள் என சிறப்பித்து அழைக்கப்பட்டன.

# வன்னி சிற்றரசர் கால ஆலயங்கள்






ஒட்டுசுட்டான் தான்தோன்றியீஸ்வரர் ஆலயம்




உருத்திரபுரம் உருத்தீஸ்வரர் ஆலயம்



வவுனிக்குளம் சிவாலய
புராதன சிவலிங்கம்




குமாரபுரம் சித்திர வேலாயுதர்ஆலயம்



செட்டிக்குளம் மகிஷாசுர
மர்த்தினி அம்மன் சிலை

# கிழக்கிலங்கையின் தேசத்துக் கோயில்கள்



வெருகல் சித்திர வேலாயுதர் கோயில்



சித்தாண்டி சித்திர வேலாயுதர் கோயில்



கோயில் போரதீவு சித்திர வேலாயுதர் கோயில்



மண்டூர் முருகன் கோயில்



திருக்கோயில் சித்திர வேலாயுதர் கோயில்



உகந்தை சித்திர வேலாயுதர் கோயில்

**திருப்படைக் கோயில்கள்**



கொக்கட்டிச் சோலை தான்தோன்றியீஸ்வரம்



மாமாங்கேஸ்வரம்



பாண்டிருப்பு திரௌபதி அம்மன் கோயில்




திருக்கரசை பரமேஸ்வரர் ஆலய புராதன கண்டா மணி



தம்பலகாமம் ஆதி கோணேஸ்வரர் ஆலயம்.



பன்குளம் பறையனூர் எல்லைக் காளியம்மன்



திருக்கோணமலை பத்திர காளியம்மன் ஆலயம்

முருகனது வேல் பிரதிட்டை செய்யப்பட்ட ஆலயங்களை திருப்படைகோயில்கள் என அழைக்கும் மரபு காணப்பட்டது. வெருகல், சித்தாண்டி, கோயிற் போரதீவு, மண்டூர், திருக்கோயில், உகந்தை முதலான இடங்களில் அமையப்பெற்ற சித்திவேலாயுத சுவாமி கோயில்கள் திருப்படைக் கோயில்களாகும். மேலும் பானகம சிவாலயம், அம்பாறை சிவன் கோயில், காரைதீவு கண்ணகியம்மன் கோயில், பாண்டிருப்பு திரௌபதியம்மன் கோயில் என்பனவெல்லாம் சீர்பெற்று விளங்கிய சைவ ஆலயங்களாகும்.

அத்தோடு திருகோணமலை மாவட்டத்தில் அமைந்த திருகோணமலைநகர் பத்திரகாளி அம்மன் ஆலயம், பன்குளம் பறையனூர் எல்லைக்காளி அம்மன் ஆலயம், தம்பலகாமம் ஆதிகோணேச்சர ஆலயம், கங்குவேலி திருக்கரசை பரமேஸ்வரர் ஆலயம் என்பன இக்காலத்தில் பொலிவுடன் விளங்கிய ஆலயங்களாகும். திருக்கரசை பரமேஸ்வரர் ஆலயத்தைப் பற்றி கரைசைப் புலவரால் **"திருக்கரசைப் புராணம்"** அக்காலத்தில் பாடப்பட்டுள்ளது.

## உ. கண்டி இராச்சியத்தில் சைவம்

கண்டியரசர்களது காலத்தில் சைவம் நன்னிலை பெற்றது. இவ்வரசர்கள் பலர் தமிழ்நாட்டில் இருந்தே தங்கள் பட்டத்தரசிகளைத் தெரிவு செய்தனர். கண்டி இராச்சியத்தின் இறுதி மன்னர்கள் நாயக்க வம்சத்தினைச் சேர்ந்தவர்களாகக்காணப்பட்டனர். கண்டிக்கதிரேசன் கோயில், கண்டி கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயம், கண்டி நாததேவாலயம், மாத்தளை பதவிற்ற ஈஸ்வரன் கோயில் என்பன இக்காலத்திற் சிறப்புப்பெற்ற ஆலயங்களாகும்.

எனவே இக்காலத்தில் நாடளாவிய ரீதியில் சைவம் நன்னிலை பெற்றமையை அவதானிக்க முடிகிறது.



கண்டி கதிரேசன் ஆலயம்



கண்டி கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயம்



கண்டி நாத தேவாலயம்

## ஊ. பௌத்த, சைவ உறவு

சைவமும் பௌத்தமும் தம்முள் கோட்பாட்டின் அடிப்படையில் வேறுபட்டுச் சென்றாலும் அவை காலத்திற்குக் காலம் ஒன்றையொன்று ஆதரித்தே இலங்கையில் வளர்ச்சியடைந்து வந்துள்ளன.

சைவ ஆலயங்கள் பௌத்த மன்னர்களால் கட்டப்பட்டும், புனருத்தாரணம் செய்யப்பட்டும் காணப்பட்டன. அத்தோடு கஜபாகு மன்னனால் கேரள நாட்டிலிருந்து அறிமுகம் செய்யப்பட்ட கண்ணகி வழிபாட்டின் தொடர்ச்சியாகவே இன்றைய கண்டித் தலதாமாளிகையினால் நடாத்தப்படும் எசலபெரஹரா அமைகிறது.

சைவசமயத்தவர்களினால் வழிபடப்படும் தெய்வங்களை பௌத்தர்களும் வேறுபாடு இன்றித் தமது விகாரைகள் தோறும் வழிபடுகின்றனர். உபுல்வன், விஷ்ணு, சமன், ஸ்கந்தன், பத்தினி ஆகிய தெய்வங்கள் பௌத்த மக்கள் மத்தியில் நாற்றிசைக் காவல் தெய்வங்களாகக் கருதப்படுகின்றன. அத்துடன் கதிர்காமக் கந்தன், தெவிநுவர விஷ்ணு மற்றும் சிவனொளிபாதமலை போன்றன பௌத்தர்களும் சைவர்களும் பொதுவாக வழிபடும் வழிபாட்டிடங்களாகும். முன்னேச்சரமும் “முனீஸ்வரம்” என பௌத்த மக்களால் வழிபடப்படுகிறது.

இலங்கையில் அமைக்கப்பட்ட பௌத்தசமய கட்டடங்கள் பல இந்து திராவிட கட்டடக்கலை மரபுகளைத் தழுவி எழுச்சி பெற்றன. இசுறுமுனிய விகாரை மற்றும் மாத்தளையில் அமையப்பெற்ற நாலந்த கெடிகே, தெவிநுவரவில் அமைந்த விஷ்ணு ஆலயம் என்பன திராவிடக்கட்டடக் கலை மரபில் அமைந்த கற்றளிகளாகும். பொலநறுவைக் கால கட்டடங்களில் காணப்படும் சந்திரவட்டக்கற்களில் அநுராதபுரக்கால சந்திரவட்டக்கற்களில் காணப்படுவது போல “எருது” இடம்பெறவில்லை. சைவர்கள் புனிதமாகப் போற்றும் இடபத்திற்கு பௌத்தர்களும் அளித்த முக்கியத்துவம் இதன் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.


கம்பளை இராசதானியில் ஐந்தாம் புவனேகபாகுவின் காலத்தில் **கணேஸ்வராச்சாரியார்** எனும் சிற்பியால் அமைக்கப்பட்ட கடலாதெனிய விகாரை, மற்றும் **ஸ்தவதிராயர்** எனும் சிற்பியால் அமைக்கப்பட்ட லங்காதிலக விகாரை என்பனவும் கேகாலை அலவதுர விகாரை, கண்டி நாத தேவாலயம், ரிதி விகாரை மண்டபம், எம்பக்க தேவாலயம் என்பவற்றில் நாயக்கர் கால கலை மரபுகளை அவதானிக்க முடிகிறது.


ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

பௌத்த, சைவ மன்னர்கள் மற்றும் மேட்டுக் குடியினரிடையே ஏற்பட்ட கலப்புத் திருமணங்கள் இலங்கையின் சைவ பௌத்த ஒருமைப்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளன. கம்பளை இராச்சியத்தின் சேனாதிலங்கார குடும்பம், கோட்டை இராச்சியத்தின் நிஸங்க அழகக் கோனார் குடும்பம் மற்றும் கண்டி இராச்சியத்தின் இறுதி மன்னர்கள் ஆகியோர் இம்மரபில் வந்தவர்களாவார். கண்டி இராச்சியத்தின் இறுதி மன்னனாகிய ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் நாயக்க மன்னர்களது மரபில் வந்ததுடன் இவனது இயற்பெயர் கண்ணுசாமியாகவும், இவனது மனைவியின் பெயர் ராணிரெங்கம்மா எனும் தமிழ் சைவப் பெயராகவும் அமைந்திருந்தன.


ராணி ரெங்கம்மா

# பௌத்தர்கள் வழிபடும் இந்துத் தெய்வங்கள்



விஷ்ணு



சமன் - (இந்திரன்)



கதிர்காமக் கந்தன்



பத்தினி (கண்ணகி)



சிவனொளிபாத
மலை

# இந்து திராவிடக் கட்டடக் கலை மரபுகளைத் தழுவி எழுச்சி பெற்ற பௌத்த கட்டடங்கள்



கடலாதெனிய விகாரை



லங்காதிலக விகாரை



எம்பக்க தேவாலயம்

இன்று நமக்குக் கிடைக்கும் இலங்கைத் தமிழ் நூல்கள் வரிசையில் காலத்தால் முந்திய நூலாக "சரசோதி மாலை" என்னும் சோதிட நூல் அமைகிறது. இது தம்பதெனியாவை ஆண்ட மூன்றாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் அவனது அவைக்களப் புலவனாக விளங்கிய "தேனுவரைப் பெருமாள்" என்ற புனைபெயரை உடைய போசராச பண்டிதனால் உருவாக்கப்பட்டதாகும். எனவே பௌத்த மன்னன் சைவ சோதிட மரபுகளை அறிவதிலும் அவற்றை எழுதுவோரை ஊக்குவிப்பதிலும் ஆர்வமுடையவனாக விளங்கினான் என்பதை அவதானித்துக் கொள்ள முடிகிறது.

## மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. தென்னிலங்கை இராசதானிகளில் காணப்பட்ட சைவம் பற்றிய தகவல்களைத் தரும் சிங்கள மொழியில் அமையப் பெற்ற தூதுப் பிரபந்த நூல்கள் யாவை?
2. யாழ்ப்பாண இராச்சிய காலப்பகுதியில் எழுச்சி பெற்ற சைவ இலக்கியங்கள் எவை?
3. வன்னிச் சிற்றரசர் காலத்தில் தோற்றம் பெற்ற ஐந்து ஆலயங்களைத் தருக.
4. திருக்கரசைப்புராணம் எவ்வாலயத்தின் சிறப்புகளைக் கூறுகின்றது?
5. இந்து திராவிட கட்டட மரபிலமைந்த பௌத்த கட்டடங்கள் யாவை?

## செயற்பாடு

1. பொலநறுவை அரசுக்குப் பிற்பட்டதும் போர்த்துக்கேயர் வருகைக்கு முற்பட்டதுமான காலப்பகுதியில் காணப்பட்ட சைவ மையத்தின் வளர்ச்சிநிலையை அட்டவணைப்படுத்தி வகுப்பறையிற் காட்சிப்படுத்துங்கள்.

2. இக்காலத்தைச் சேர்ந்த சைவ சமய மரபினை வெளிப்படுத்தும் படங்களைச் சேகரித்து காட்சிப்படுத்துங்கள.

## பாடச்சுருக்கம்.

- பொலநறுவைக் காலத்திற்குப் பின்னர் எழுச்சிபெற்ற தென்னிலங்கை, இராசதானிகள், யாழ்ப்பாண இராச்சியம், வன்னி மற்றும் கிழக்கிலங்கை இராசதானிகள், கண்டி இராச்சியம் ஆகிய இராச்சியங்களில் மன்னர்களால் சைவசமயம் சிறப்புடன் தழைத்தோங்கியது.
- பௌத்தசமய கலாசாரத்தில் சைவசமயத்தின் செல்வாக்கும் காணப்பட்டது.

# 5. ஐரோப்பியர் காலம்

## அ. போர்த்துக்கேயர் காலம் (1505 - 1658)

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த போது கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் என்னும் மூன்று இராசதானிகள் காணப்பட்டன. அவர்களது ஆட்சிக்காலத்தில் கோட்டை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இராசதானிகள் வீழ்ச்சியடைந்ததுடன் கண்டியைக் கைப்பற்றும் அவர்களின் முயற்சியும் தோல்வியுற்றது. போர்த்துக்கேயர் காலம் “இலங்கையின் சைவசமய வரலாற்றின் வீழ்ச்சிக் காலம்“ என்று கருதுமளவிற்கு சைவம் நலிவடைந்திருந்தது.

பொலிவுடன் விளங்கிய சைவ ஆலயங்கள் பல அவர்களது காலத்தில் இடித்தழிக்கப்பட்டன, அங்கிருந்த பெறுமதிமிக்க பொருட்கள் சூறையாடப்பட்டன. ஆலய வார்ப்பு விக்கிரகங்களை உருக்கி மணிகளும், இடிக்கப்பட்ட ஆலய கற்களைக் கொண்டு கோட்டைகளும் கட்டப்பட்டன. முதலியார் இராசநாயகம் அவர்கள் யாழப்பாணச் சரித்திரம் என்ற நூலில் சீதாவாக்கையில் அமையப்பெற்ற வெரெண்டி கோயில் 1553லும் முன்னேச்சரம் 1575லும் தெநுவர விஷ்ணு கோயில் 1588லும் திருக்கோணேச்சரம் 1622லும் போர்த்துக்கேயரால் இடிக்கப்பட்டதாக குறிப்பிடுகிறார். இவ்வாலயங்கள் போன்றே திருக்கேதீச்சரம், நகுலேச்சரம், நல்லூர் கந்தசுவாமி ஆலயம் என்பனவும் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டன.

போர்த்துக்கேயருக்குப் பயந்த சைவர்கள் சைவ பாரம்பரியத்தைப் பேணுமுகமாக வீட்டுவளவின் மரத்தடிகளில் சூலத்தை நட்டு வழிபட்டனர். இவ் வைரவர் வழிபாடு அக்காலப் பகுதியில் வேகமாக வளர்ந்தது. போர்த்துக்கேயர் ஆலய வழிபாட்டினை தடை செய்ததுடன் சைவப் பண்பாட்டினைப் பேணுவதற்கும் தடை விதித்தனர். இதனால் சைவமக்கள் நெற்றியில் திருநீறு அணியவும் விரதத்திற்கு வாழையிலையில் உணவுண்ணவும் அஞ்சினர்.



எனவே போர்த்துக்கேயர் காலத்தில் சைவசமயம் நலிவடைந்ததுடன் கலாசார, உணர்வும் நசுக்கப்பட்டு சைவ மக்கள் தமது தனித்துவத்தினை இழந்த காலமாகவும் அமைந்தது எனலாம்.


## ஆ. ஒல்லாந்தர் காலம் (1658 - 1796)

போர்த்துக்கேயரை அடுத்து வந்த ஒல்லாந்தர்களது காலத்தில் முன்னரை விட ஓரளவு சமய சுதந்திரம் காணப்பட்டது. ஆயினும் ஒல்லாந்தரின் காலப்பகுதியில் ஒவ்வொரு சைவ வீட்டினின்றும் தமது இறைச்சியின் பொருட்டு பசு ஒன்றினைத் தருமாறு கட்டளையிட்டனர். அதை எதிர்த்த திருநெல்வேலி ஞானப்பிரகாச சுவாமிகள் தமது முறை வந்த போது இரவோடிரவாக கப்பலேறி சிதம்பரம் சென்று அங்கு பல சிவப்பணிகள் செய்தார்.

இக்காலப்பகுதியில் மட்டக்களப்பில் சைவ ஆலயங்கள் சில அழிக்கப்பட்டதாக "மட்டக்களப்பு தமிழகம்" எனும் நூல் மூலம் அறிய முடிகிறது. எனினும் ஒல்லாந்தர்களின் ஆட்சியின் பிற்பகுதியில் பல சைவ ஆலயங்கள் எழுச்சி பெற்றன. 1773ல் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயமும், 1782ல் மாவிட்டபரம் கந்தசுவாமி ஆலயமும் புனருத்தாரணம் செய்யப்பட்டன. 1787ல் வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயம் ஒல்லாந்த தளபதியின் மனைவியின் ஆதரவுடன் வைத்திலிங்கச் செட்டியாரால் அமைக்கப்பட்டு 1791ல் கும்பாபிஷேகம் நடாத்தப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.


ஞானப்பிரகாச முனிவர்

ஒல்லாந்தர் காலப்பகுதியில் ஏற்பட்ட சமய சுதந்திரத்தின் விளைவால் அக்காலப்பகுதியில் சைவசமய நூல்கள் பல எழுச்சி பெற்றன. நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பறாளை விநாயகர் பள்ளு, கல்வளை அந்தாதி, மறைசையந்தாதி, ஆகிய சைவப் பிரபந்தங்களையும் சேனாதிராச முதலியார் நல்லைக் குறவஞ்சியையும், முத்துக்குமார கவிராயர், ஞானக்கும்மியையும், வட்டுக்கோட்டை கணபதி ஐயர், வண்ணை வைத்தியலிங்க குறவஞ்சியையும், கூழங்கைத்தம்பிரான் தில்லைக் கலிவெம்பாவையும், இணுவில் சின்னத்தம்பிப் புலவர், சிவகாமியம்மை பிள்ளைத்தமிழையும் பாடினர். இப்பிரபந்தங்கள் மூலம் அக்காலப்பகுதியில் எழுச்சிபெற்ற சைவ ஆலயங்களின் சிறப்பினை அறியலாம்.


வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயம்

# இ. ஆங்கிலேயர் காலமும் பத்தொன்பதாம் நூற்றாண்டும் (1796 - 1948)

ஒல்லாந்தரைத் தொடர்ந்து இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்றிய ஆங்கிலேயரது காலத்தில் கண்டி இராச்சியம் உட்பட முழு இலங்கையும் அவர்களது வசமாயிற்று. ஆங்கிலேயர்கள் ஆங்கிலக்கல்வி, அரச உத்தியோகம் என்பவற்றைக் காட்டி சைவர்களை மதமாற்றக் கொள்கைக்கு உட்படுத்தினர். இக்காலப்பகுதியில் அமெரிக்கன் மிஷன், வெஸ்லியன் மிஷன், மெதடிஸ்த மிஷன், சேர்ச் மிஷன், பப்டிஸ்ட் மிஷன் முதலிய கிறிஸ்தவ சபைகள் மூலம் அவர்களின் மறை பரப்பு பணிகளாலும் அதிகமான இந்துக்கள் கிறிஸ்தவர்களாக மதம் மாறினர்.

இந்நிலையைக் கண்டு மீண்டும் சைவ சமயத்தினை நிலைநிறுத்தும் பொருட்டு சைவப்பணியில் பல சைவப் பெரியார்கள் ஈடுபட்டனர். அவர்களுள் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் முதன்மை பெறுகிறார். அவரது பலதரப்பட்ட பணிகளால் சைவசமயம் மறுமலர்ச்சி கண்டது.

அவர் 1848ல் வண்ணார்பண்ணையில் அமைத்த சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தொடர்ந்து நாட்டின் பல பாகங்களிலும் சைவப் பாடசாலைகள் எழுச்சி பெற்றன.



சேர் பொன் இராமநாதன்

நாவலரைத் தொடர்ந்து 19ம் நூற்றாண்டின் சைவசமய வளர்ச்சிக்கு பணியாற்றிய சைவப் பெரியார்களுள் சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம், புலோலியூர் நா. கதிரவேற்பிள்ளை, சுண்ணாகம் அ. குமாரசாமி புலவர், மாதகல், அ. ஏரம்பையர் முதலியோர் குறிப்பிடத் தக்கவர்களாவர். அத்துடன் "சைவப்பிரகாச சமாஜம்" "சைவ பரிபாலன சபை" ஆகிய சைவசமய நிறுவனங்கள் தோற்றம் பெற்று பலதரப்பட்ட சமய சமூகப் பணிகளை ஆற்றின. நாட்டுக் கோட்டை செட்டிமார்களினால் கொழும்பு, கேகாலை, காலி, மாத்தளை, நாவலப்பிட்டி, பதுளை, குருநாகல், கம்பளை, அநுராதபுரம், யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் கதிரேசன் கோயில்கள் அமைக்கப்பட்டன. அத்தோடு கொழும்பில் "வேல் விழா" இவர்களால் நடாத்தப்பட்டது. கொழும்பு கப்பித்தாவத்தை கைலாச நாதர் ஆலயம், கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில், உடப்பு திரௌபதை அம்மன் ஆலயம் என்பன இக்காலத்தில் தோற்றம் பெற்ற ஆலயங்களுள் குறிப்பிடத்தக்க கனவாகும். மலையகப் பகுதிகளில் மாரியம்மன் ஆலயங்கள் பலவும் தோற்றம் பெற்றன. இவற்றுள் மாத்தளை முத்துமாரியம்மன் தேவஸ்தானம் முதன்மை பெற்றுத் திகழ்கிறது. 1897ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தை தொடர்ந்து சைவசமய விழிப்புணர்வு அதிகமாயிற்று.



சேர் பொன் அருணாசலம்

## கதிரேசன் கோயில்கள்



அநுராதபுரம்



கொழும்பு



காலி



வேல் விழா ரதம்

மாத்தளை
முத்துமாரியம்மன்
கோயில்



கொழும்பு
கப்பிதாவத்தை
கைலாச நாதர்
கோயில்



கொழும்பு
கொம்பனித்தெரு
சிவசுப்ரமணிய
சுவாமிகோயில்



உடப்பு திரௌபதி
அம்மன் கோயில்



# 6. இருபதாம் நூற்றாண்டு

1948ல் இலங்கை சுதந்திரம் அடைந்ததுடன் சுதேசிய சமயங்கள் தத்தம் போக்கில் சுதந்திரமாக வளர்ச்சி கண்டன. இக்கால சைவசமய வளர்ச்சிக்கு பல சைவ பெரியார்களும் சைவ நிறுவனங்களும் தோன்றி நாட்டின் பல பாகங்களிலும் சைவத்தினை மேம்படுத்தின.

கிழக்கிலங்கையில் குறிப்பாக மட்டக்களப்பில் தோன்றிய சுவாமி விபுலானந்தரது பலதரப்பட்ட பணிகள் சிறப்பானவை. இவரைத் தொடர்ந்து வைத்தியலிங்கத்தேசிகர், வித்துவான் சரவணமுத்தர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை முதலியோர் கிழக்கிலங்கையிலுள்ள ஆலயங்கள் மீது பிரபந்தங்கள் பாடியுள்ளனர். “சைவசமய சிந்தாமணி”, “இந்து சமய மாதமகத்துவ மான்மியம்” ஆகிய நூல்களை எழுதிய அருணாசல தேசிகமணி மற்றும் வித்துவான் சரவணமுத்து ஆகியோர் மட்டக்களப்பின் பின்தங்கிய கிராமங்கள் தோறும் சென்று சைவசமய உண்மைகளைப் பிரசாரம் செய்தனர்.

சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரனார், பண்டிதமணி. சி. கணபதிபிள்ளை, சேர். கந்தையா வைத்தியநாதன். இந்துபோட். சு. இராசரத்தினம், சபாபதி நாவலர் ஆகிய பெரியோர்களது பலதரப்பட்ட சைவப்பணிகள் மூலம் இக்கால சைவசமயம் வளர்ச்சி கண்டது.

இக்காலப்பகுதியில் தோற்றம் பெற்ற சைவ நிறுவனங்களின் பல்வேறுப்பட்ட பணிகள் போற்றுதற்குரியனவாக அமைந்திருந்தன. 1902ல் அமைக்கப்பட்ட கொழும்பு விவேகானந்த சபை 1924ல் நிறுவப்பட்ட சைவவித்தியா விருத்திச் சங்கம் மற்றும் இராமகிருஷ்ண மிஷன், இந்துக்கல்லூரிகள் சபை, அகில இலங்கை இந்து மாமன்றம், நல்லை ஆதீனம், சிவதொண்டன் நிலையங்கள் என்பன அவற்றுள் பிரதான மானவையாகும்.

நாவலப்பிட்டியிலிருந்து சமயப் பணிகள் புரிந்த ஏழாலை நா. முத்தையா அவர்கள் "ஆத்மஜோதி" எனும் மாதாந்த சஞ்சிகை ஒன்றை வெளியிட்டார். இன்று கனடாவில் ஆத்மஜோதி சஞ்சிகை வெளிவருகிறது.

இந்நூற்றாண்டில் இந்து சமய மரபுகளைப் பேணிப் பாதுகாக்கும் பொருட்டு இலங்கை அரசினால் இந்து சமய கலாசார திணைக்களம் உருவாக்கப்பட்டது. முதன்முறையாக தமிழில் "இந்துக் கலைக் களஞ்சியம்" என்னும் கலைக்களஞ்சியத் தொகுதிகளைத் இத்திணைக்களம் வெளியிட்டு வருவது மேலும் சிறப்பானது.

சைவ சமயக்கல்வி இடைநிலை வகுப்புகளில் மாத்திரமின்றி உயர் வகுப்புகளிலும் மற்றும் பல்கலைக் கழகங்களிலும் கற்பிப்பதற்கு வாய்ப்புகள் இக்காலப்பகுதியில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பேராசியர் கா. கைலாச நாதகுருக்களால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட "இந்துநாகரிகத்துறை" மூலம் இந்துத் தத்துவம், இந்துப் பண்பாடு சார்பான உயர்நிலை ஆய்வுகளுக்கும் உயர்பட்டப் படிப்புகளுக்கும் வசதியளிக்கப்பட்டுள்ளன.

எனவே இந்தியாவில் பெருவளர்ச்சி கண்டுள்ள சைவசமயம் இந்தியாவுக்கு அடுத்த நிலையில் இலங்கையில் தழைத்தோங்குகிறது எனக் கூறுவதற்கு மேற்கூறப்பட்ட வரலாற்றுச் செய்திகள் சான்றாய்த் திகழ்கின்றன.

## மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக

1. போர்த்துக்கேயரது காலத்தில் சைவ மக்கள் அதிகமாய்ப் பின்பற்றிய வழிபாடு யாது?
2. ஒல்லாந்தர் காலப்பகுதியில் புனருத்தாரணம் செய்யப்பட்ட இரண்டு ஆலயங்களைக் குறிப்பிடுக?
3. இலங்கையில் முதன்முதலாக அமைக்கப்பட்ட சைவப்பாடசாலை யாது?
4. 20ஆம் நூற்றாண்டில் கிழக்கிலங்கையில் சைவப்பணியாற்றிய பெரியார்களின் பெயர்களைத் தருக?
5 20ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற இந்து சமய நிறுவனங்கள் எவை?

## செயற்பாடு

1. போர்த்துக்கேயர் காலத்தில் சைவசமயத்தின் நிலை பற்றி ஐந்து நிமிடம் வகுப்பறையில் உரையாற்றுங்கள்
2. 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையின் சைவசமயத்தின் நிலை பற்றிக் கட்டுரை ஒன்றை வரைந்து அதனை வகுப்பறையில் வாசித்துக் காட்டுக.

## பாடச்சுருக்கம்

1. ஐரோப்பியர்களது ஆட்சிக்காலத்தின் முற்பகுதியில் சைவசமயம் வீழ்ச்சியுற்ற போதும் பிற்பகுதியில் வளர்ச்சியுற்றது.
2. சைவப்பெரியார்களும் சைவ நிறுவனங்களும் பலதரப்பட்ட பணிகளை ஆற்றி சைவத்தின் நன்னிலைக்கு பாரிய சேவையாற்றியமை.